# அறிமுகம்

தேவன் நம் ஒவ்வொருவருக்கும் ஒரு குறிப்பிட்ட திட்டத்தை வைத்திருக்கிறார். தேவனுடைய அந்தக் குறிப்பிட்ட திட்டமானது நம் வாழ்வின் மீதான அவரது அழைப்பே என்பதை நம்மில் பெரும்பாலானோர் நம்புகிறோம் மற்றும் புரிந்துகொள்கிறோம். மேலும், நமக்கான தேவனுடைய திட்டம் தானாக நிறைவேறாது என்பதை நாம் நன்கு அறிவோம். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், நம் வாழ்வில் தேவனுடைய அழைப்பை நிறைவேற்றுவதில், நமக்கும் ஒரு பங்கு உள்ளது. அவருடைய திட்டங்கள் நமக்குள்ளும் நம் மூலமாகவும் நிறைவேற்றப்பட, நாம் தனிப்பட்ட விதத்தில் தேவனுடன் ஒத்துழைக்க வேண்டும்.

தேவன் நம்மை என்ன செய்ய அழைத்திருக்கிறார் என்பதன் முக்கியத்துவமோ அல்லது மகத்துவமோ இங்கு முக்கியமல்ல, மாறாக, நாம் அந்த அழைப்பை நிறைவேற்ற வேண்டும் என்பதே முக்கியம் என்பதை நாம் உணர வேண்டும். நம்மில் சிலர் "பெரிய" காரியங்களைச் செய்ய அழைக்கப்படலாம்; மற்றவர்கள் "சிறிய" காரியங்களைச் செய்ய அழைக்கப்படலாம். "பெரியது" மற்றும் "சிறியது" என்ற அளவானது வெறுமனே மனுஷனுடைய பார்வையில் தோன்றுபவைதான். தேவனுடைய பார்வையில், "பெரியது" மற்றும் "சிறியது" ஆகிய இரண்டுமே ஒரே அளவில் முக்கியத்துவம் வாய்ந்தது. "பெரிய" காரியங்களைச் செய்ய அழைக்கப்பட்டவர்களும் "சிறிய" காரியங்களைச் செய்ய அழைக்கப்பட்டவர்களும் தங்கள் அழைப்பை நிறைவேற்ற வேண்டும் என்பதில் மட்டுமே அவர் ஆவலாய் இருக்கிறார். "பெரியது" மற்றும் "சிறியது" ஆகிய இரண்டு ஊழியமுமே ஒன்றுக்கொன்று தொடர்புடையதும் ஒன்றையொன்று சார்ந்ததுமாய் இருக்கின்றன. ஒன்று தோல்வியுற்றால், மற்றொன்று பாதிக்கப்படும். பெரிய கூட்டங்களில் பிரசங்கிக்கும் "பெரிய" சுவிசேஷகர் ஒலிபெருக்கி அமைப்பை இயக்கும் "சிறிய" முகமறியாத தொழில்நுட்ப வல்லுநரைச் சார்ந்துதான் இருக்கிறார். அந்தத் தொழில்நுட்ப வல்லுநர் தன் பங்கைச் செய்யத் தவறினால் அல்லது அந்த வேலையை மோசமாகச் செய்தால் எப்படி இருக்கும்?

இருப்பினும், நாம் அனைவரும், "பெரிய" காரியங்களைச் செய்ய அழைக்கப்பட்டாலும் சரி அல்லது "சிறிய" காரியங்களைச் செய்ய அழைக்கப்பட்டாலும் சரி, தேவனுடைய அழைப்பை நிறைவேற்றுவதைத் தடுக்கக்கூடிய சவால்களை நாம் எதிர்கொள்வோம். பின்னர், தேவனுடைய அழைப்பைப் பின்தொடர்வதிலிருந்து நம்மைத் தடுக்க முயற்சிப்பவனாகிய பிசாசு ஒருவன் இருக்கிறான். தேவனுடைய திட்டத்தை வைராக்கியத்துடன் பின்பற்றத் தொடங்கிய நம்மில் சிலர், எப்படியோ ஒரு விதத்தில் ஒரு சில காரியங்களில் சமரசம் செய்துவிட்டு, அவருடைய திட்டத்தைப் பின்தொடராமல் விட்டுவிட்டோம். நம் வழியில் ஏதோ ஒரு இடத்தில் அப்படியே நின்று விட்டோம். ஒருவேளை நாம் திசைதிருப்பப்பட்டிருக்கலாம், தேவனுடைய ராஜ்யத்தைப் பின்தொடர்வதற்குப் பதிலாக, வெற்றி, ஐசுவரியம் அல்லது தனிப்பட்ட லட்சியங்களைப் பின்தொடர்வதற்—காக இப்போது நம் பலத்தை செலவிட்டுக்கொண்டிருக்கலாம். நம்மில் சிலர், பரலோக அழைப்புக்கு பதிலளிப்பதை நாம் அலட்சியப்படுத்திவிட்டு, வாழ்க்கையின் அன்றாட நிகழ்வுகளில் சிக்கித் தவித்துக்கொண்டிருக்கலாம். நமக்கு வெளிப்படுத்தப்பட்ட கர்த்தருடைய வார்த்தை, பரிசுத்த ஆவியானவர் நமக்குக் கொடுத்த சொப்பனங்கள் மற்றும் தரிசனங்கள் ஆகியவை ஒரு மூலையில் வைத்து வைக்கப்பட்டிருக்கலாம். அவை நமக்கு மறந்துபோயிருக்கலாம் அல்லது பயத்தினாலோ அவிசுவாசத்தினாலோ வேண்டுமென்றே ஒதுக்கித்தள்ளப்பட்டிருக்கலாம். நம்மைத் தட்டிஎழுப்பி, மீண்டும் நிலைநிறுத்துவதே இந்தப் புத்தகத்தின் நோக்கமாகும். நல்ல போராட்டத்தை போராடி நமக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கிற ஓட்டத்தை ஓடி முடிப்பதைத் தடுக்கும் காரியங்களில் நாம் சிக்கிக் கொள்ளக்கூடிய சில கண்ணிகளைப் பற்றி எச்சரிப்பதே இந்தப் புத்தகத்தின் நோக்கமாகும்.

தேவன்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!
ஆஷிஷ் ராய்ச்சூர்

# 1

# இந்த உலகத்தின் கவலைகள்

அப்போஸ்தலனாகிய பவுல் அவருடன் பணிபுரிந்தவர்கள் அல்லது அவருடன் ஊழியத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் அநேகரைப் பற்றித் தன்னுடைய நிருபங்களில் குறிப்பிடுகிறார். அவ்வாறு பவுல் தனது நிருபங்களில் மூன்று வெவ்வேறு இடங்களில் குறிப்பிட்டுள்ள நபர் ஒருவர் இருக்கிறார். பவுல் பிலேமோனுக்கு எழுதிய நிருபத்தில் தேமா என்ற நபரைத் தனது "உடன்வேலையாள்" என்று குறிப்பிடுகிறார் (பிலேமோன் 1:24) மேலும் கொலோசெயருக்கு வாழ்த்துக்களை அனுப்புகையில் அவனது பெயரையும் சேர்த்து அனுப்புகிறார் (கொலோசெயர் 4:14). இருப்பினும், அடுத்தமுறை, அதாவது அதுவே கடைசி முறை பவுல் குறிப்பிட்டதாக இருந்தது, அவன் தேமாவைப் பற்றிக் குறிப்பிடுகையில், *"... ஏனென்றால், தேமா இப்பிரபஞ்சத்தின்மேல் ஆசைவைத்து, என்னைவிட்டுப் பிரிந்து, தெசலோனிக்கே பட்டணத்துக்குப் போய்விட்டான். கிரெஸ்கே கலாத்தியா நாட்டிற்கும், தீத்து தல்மாத்தியா நாட்டிற்கும் போய்விட்டார்கள்"* (2 தீமோத்தேயு 4:10) என்று எழுதுகிறார். அப்போஸ்தலனாகிய பவுலுடன் தோளோடு தோள் நின்று, அவருடைய சக ஊழியராக இருந்த ஒருவன், ஊழியத்தையும் அப்போஸ்தலனாகிய பவுலையும் விட்டுவிட்டு, உலகத்திற்குள் திரும்பிச் சென்று, தனது சொந்தத் திட்டங்களைத் தொடரும்படிக்கு உலகத்தால் மிகவும் ஏமாற்றப்பட்டதைக் கற்பனை செய்து பாருங்கள்.

இந்த உலகத்தின் ஈர்ப்புகள் மற்றும் கவலைகளிலிருந்து நாம் அனைவரும் நம் இருதயங்களைக் காத்துக்கொள்ள வேண்டும். ஒருபுறம், நம் பரலோக அழைப்பைப் பின்தொடர வேண்டிய அவசியத்தை நாம் மறந்துவிடும் அளவுக்கு வாழ்க்கை மிகவும் எளிதாகவும் வசதியாகவும் மாறக் கூடும். மறுபுறம், வாழ்க்கை பல பிரச்சனைகள் மற்றும் கவலைகளால் நிறைந்ததாய் நம்மை நெருக்குகையில், சவால்களை மேற்கொண்டு வெற்றி பெறுவதில் நாம் மிகவும் மும்முரமாக இருந்து, அழைப்பைப் புறக்கணிப்பவர்களாக மாறிவிடுகிறோம். *"... வசனத்தைக்*

# 2

# கட்டுக்குள் வைத்திருக்கும் பந்தங்கள்

நம்மீது அன்பும் அக்கறையும் கொண்ட குடும்பத்தையும் நண்பர்களையும் கொண்டிருப்பது அற்புதமானது என்றாலும், சில சமயங்களில், இந்த பந்தங்களே நம்மைக் கட்டுக்குள் வைக்கின்றனர் மற்றும் தேவனுடைய அழைப்பை நாம் பின்தொடருவதிலிருந்து நம்மைத் தடுக்கின்றனர். எத்தனை வாலிபர்கள் மற்றும் வாலிபப் பெண்கள், தங்கள் தந்தை அல்லது தாயின் விருப்பங்களை நிறைவேற்றுவதற்காக, தங்கள் பரலோக அழைப்பை சமரசம் செய்துகொண்டு, தேவன் அவர்களது வாழ்வைக் குறித்து ஒருபோதும் நினைத்திராத காரியங்களைப் பின்தொடர்கிறார்கள். லூக்கா எழுதின சுவிசேஷம் பின்வரும் பத்தியைப் பதிவு செய்கிறது, *"வேறொருவனை அவர் நோக்கி: என்னைப் பின்பற்றிவா என்றார். அதற்கு அவன்: ஆண்டவரே, முன்பு நான் போய் என் தகப்பனை அடக்கம்பண்ண எனக்கு உத்தரவு கொடுக்க வேண்டும் என்றான். அதற்கு இயேசு: மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம்பண்ணட்டும்; நீ போய், தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்துப் பிரசங்கி என்றார். பின்பு வேறொருவன் அவரை நோக்கி: ஆண்டவரே, உம்மைப் பின்பற்றுவேன், ஆனாலும் முன்பு நான் போய் வீட்டிலிருக்கிறவர்களிடத்தில் அனுப்புவித்துக்கொண்டுவரும்படி எனக்கு உத்தரவு கொடுக்கவேண்டும் என்றான். அதற்கு இயேசு: கலப்பையின்மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப்பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல என்றார்"* (லூக்கா 9:59-62).

குடும்பப் பொறுப்புகளை நிறைவேற்றுவதை விட தேவனுடைய அழைப்பை நிறைவேற்றுவது முதன்மையாக இருக்க வேண்டும். இது பொறுப்பற்றவர்களாக இருப்பதற்கும், நமது குடும்பங்களைப் புறக்கணிப்பதற்குமான உரிமம் அல்ல. மாறாக, தேவனைப் பின்தொடர்தல் முன்னுரிமையின் வரிசையில் இருக்க வேண்டும் என்பதுதான் முக்கியம். அதாவது கர்த்தருக்கும் அவரது ராஜ்யத்திற்கும் நம்மை அர்ப்பணிக்கும் செயலானது ஒவ்வொரு பூமிக்குரிய உறவுக்கும் மேலான ஒன்றாக வைக்கப்பட

# 3

# தணிந்துபோன அன்பு

இன்று தேவன் மீதான உங்கள் அன்பு எவ்வளவு உறுதியானதாக இருக்கிறது? கர்த்தருடைய வீட்டைக் குறித்தும் தேவனுடைய காரியங்களைக் குறித்தும் நீங்கள் வைராக்கியம் நிறைந்தவர்களாக இருக்கிறீர்களா? *"உம்முடைய வீட்டைக்குறித்து உண்டான பக்திவைராக்கியம் என்னைப் பட்சித்தது"* (சங்கீதம் 69:9; யோவான் 2:17) என்று இயேசுவைக் குறித்து எழுதப்பட்டுள்ளது. தேவனைத் தேடுவதும் அவருக்கு ஊழியம் செய்வதும் வசதிக்கான விஷயமாக இருக்கிறதா, அதற்கு முன்னுரிமை தரப்படவில்லையா? நேரம் இருந்தால் மட்டும் ஜெபிக்கிறீர்களா அல்லது ஜெபிக்க நேரம் ஒதுக்குகிறீர்களா? ஒரு மதக் கடமையை நிறைவேற்றுவதன் மூலம் உங்கள் மனசாட்சியை எளிதாக்குவதற்காக மட்டுமே நீங்கள் திருச்சபைக்குச் செல்கிறீர்களா அல்லது அது உங்கள் மனமகிழ்ச்சியாக இருப்பதால் அதைச் செய்கிறீர்களா? *"கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன், அதையே நாடுவேன், நான் கர்த்தருடைய மகிமையைப் பார்க்கும்படியாகவும், அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சிசெய்யும்படியாகவும், நான் என் ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன்"* (சங்கீதம் 27:4) என்று சொல்லி, சங்கீதக்காரன் தன் இருதயத்தை வெளிப்படுத்தினான். ஒருவேளை நீங்கள் கர்த்தரை நேசிக்கிறீர்கள் என்று சொன்னாலும், ஆதியில் கொண்டிருந்த அக்கினி அப்போது இருந்ததைப்போல உங்களுக்கு பலமாக இல்லாதிருக்கலாம்! தணிந்துபோன அன்பு என்பது அவர் கட்டளையிடுவதைச் செய்யாமல், தனக்கு வசதியானதை மட்டுமே செய்யும் அன்பாக இருக்கும். அவர் கட்டளையிடுவதைச் செய்யாமல், உங்களுக்கு வசதியானதை மட்டுமே நீங்கள் செய்தால், அவருடைய அழைப்பை உங்களால் ஒருபோதும் நிறைவேற்ற முடியாது.

நாம் தேவனுடைய அழைப்பை நிறைவேற்ற வேண்டுமானால், நம்முடைய தேவனாகிய கர்த்தரை நம்முடைய முழு

# 4

# ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்ற ஆசை

நம் வாழ்வில் தேவனுடைய அழைப்பை நாம் பின்பற்றுகிறோம் என்பதற்காக எல்லோரும் நம்மைப் பாராட்டவோ, போற்றவோ, புகழவோ போவதில்லை. ஜனங்களின் பார்வையில் நாம் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று மட்டுமே வாழ்ந்தால், நமக்கு நெருக்கமானவர்கள் கூட ஏமாற்றம் அடைந்துவிடுவார்கள். அப்படியானால், தேவன் விரும்புவதைச் செய்ய நாம் சுதந்திரமாக செயல்பட மாட்டோம். நம்முடைய பரலோகப் பிதாவை பிரியப்படுத்துவதே நமது முதன்மையான நோக்கமாக இருக்க வேண்டும். *“தேவனாலேமாத்திரம் வருகிற மகிமையைத் தேடாமல், ஒருவராலொருவர் மகிமையை ஏற்றுக்கொள்ளுகிற நீங்கள் எப்படி விசுவாசிப்பீர்கள்?”* (யோவான் 5:41,44) என்று இயேசு சொன்னார். அநேகர் தங்கள் வாழ்க்கையில் தேவனுடைய அழைப்பை சமரசம் செய்துகொள்கிறார்கள், ஏனென்றால் அவர்கள் ஜனங்களை அல்லது நிறுவனங்களை (மதப்பிரிவுகளைக் கூட) பிரியப்படுத்த வேண்டிய நிலையில் தங்களைத் தாங்களே நிறுத்திக்கொள்கிறார்கள். அதனால், புதிய ஒரு காரியத்தை, வித்தியாசமான ஒரு காரியத்தை, மற்றவர்களுக்கு விசித்திரமாகத் தோன்றும் ஒரு காரியத்தைச் செய்ய தேவன் அவர்களை அழைக்கும்போது, தங்களைச் சுற்றியுள்ள ஜனங்களால் நிராகரிக்கப்பட்டுவிடுவோம் என்ற பயத்தினால், அவர்களால் தொடர்ந்து முன்னேறிச் செல்லவும் தேவனுக்குக் கீழ்ப்படியவும் முடிவதில்லை. தெய்வபயமுள்ள ஜனங்கள் நாங்கள் செய்யும் காரியத்தை ஏற்றுக்கொள்ளாதபோது, நாங்கள் விரும்பியதை மட்டுமே செய்யும் முட்டாள்தனத்தை நாங்கள் ஆதரிப்பதில்லை. மனுஷனின் புகழை விரும்புவதைக் காட்டிலும் தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்பதைப்பற்றிதான் நாங்கள் பேசுகிறோம். இன்று நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்? மனுஷனின் பார்வையில் புகழைத் தேட வேண்டிய அவசியம் இல்லாமல், தேவன் உங்களைச் செய்யும்படி அழைக்கும் எதையும் உங்களால் செய்ய முடியுமா?

# 5

# மனுஷீக முறைப்படி காரியங்களைச் செய்தல்

நம் வாழ்வின் நோக்கத்தைப் பற்றி பரத்திலிருந்து சொல்லப்படுபவைகளை நாம் கேட்க வேண்டும் என்பது மட்டுமல்லாமல், அதை எப்படி நிறைவேற்றுவது என்பது பற்றிய தேவனுடைய வழிகாட்டுதலும் நமக்குத் தேவையாய் இருக்கிறது. சுயமாக செயல்படுவதன் மூலம் நம்மால் பரம அழைப்பை நிறைவேற்ற முடியாது. அழைப்பு மற்றும் அந்த அழைப்பை நிறைவேற்றுவதற்கான வழிமுறைகள் ஆகிய இரண்டுமே தேவனிடமிருந்து வர வேண்டும். அப்போஸ்தலனாகிய பவுல்: *“அப்படியிருந்தும், நான் என் தாயின் வயிற்றிலிருந்ததுமுதல், என்னைப் பிரித்தெடுத்து, தம்முடைய கிருபையினால் அழைத்த தேவன், தம்முடைய குமாரனை நான் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கும்பொருட்டாக, அவரை எனக்குள் வெளிப்படுத்தப் பிரியமாயிருந்தபோது, உடனே நான் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் யோசனைபண்ணாமலும்”* (கலாத்தியர் 1:15,16) என்று எழுதியிருக்கிறான். தேவனுடைய அழைப்பை நிறைவேற்ற நாம் செய்யும் காரியங்களான, யோசனைகள், முறைகள், திட்டங்கள் மற்றும் உத்திகள் அனைத்தும் தேவன் நம் இருதயத்தில் வைத்தவைகளா அல்லது அவை நம்முடைய சொந்த யோசனைகளா? அவை பரலோகத்திலிருந்து வருகிறதா அல்லது மாம்சத்திலிருந்து வருகிறதா? அவைகளுக்குப் பின்னால் உள்ள நோக்கங்கள் என்ன? நாம் பரிசுத்த ஆவியானவரைப் பின்பற்றுகிறோமா அல்லது ஒரு மனுஷனைப் பின்பற்றுகிறோமா?

பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலுக்கு நாம் நமது யோசனைகளை சமர்ப்பிக்க வேண்டும். கர்த்தருக்கு ஊழியம் செய்வதற்கும் அவருடைய ராஜ்யத்திற்காகப் பணிபுரிவதற்கும் நாம் வைராக்கியத்தைக் கொண்டிருக்க வேண்டும், ஆனால் இந்த வைராக்கியம் அவருடைய ஆவியின் வழிநடத்துதலுக்கு ஏற்ப

இருப்பதைக்கொண்டு அவர் எதை வேண்டுமானாலும் செய்யச் சொல்லலாம். நம்மிடம் என்ன இருக்கிறது அல்லது எவ்வளவு இருக்கிறது என்பதை வைத்து அல்ல. எல்லாவற்றையும் கர்த்தரிடத்தில் ஒப்படைத்துவிட்டோமா? அல்லது நம் வாழ்வில் சில விஷயங்களை—நமக்கான உடைமைகள், திட்டங்கள், கனவுகள், லட்சியங்கள், உறவுகள், பழக்கவழக்கங்கள் போன்றவற்றை—விட்டுவிடு, விலகிவிடு, ஒதுக்கிவை அல்லது அது இல்லாமல் செயல்படு என்று தேவன் சொன்னால், அவ்வாறு செய்வதற்கு கடினமாக இருக்கும் விஷயங்கள் ஏதேனும் நம்மிடம் உள்ளனவா? நம் பணம் தேவனுக்குச் சொந்தமானதா அல்லது நாம் மட்டுமே அதற்குச் சொந்தக்காரர்களா? நம்மிடம் பேசுவதற்கும், நம்மிடம் உள்ள பணத்தை அவர் என்ன செய்ய வேண்டும் என்று அவர் விரும்புகிறார் என்று நமக்குச் சொல்வதற்கும் தேவனுக்கு சுதந்திரம் இருக்கிறதா? அவர் விரும்பும் இடத்தில் விதைகளை விதைக்க நாம் ஆயத்தமாக இருக்கிறோமா? நாம் எவ்வளவு விட்டுக்கொடுக்கிறோம் என்பதல்ல, நம்மால் எதை விட்டுக்கொடுக்க முடிகிறது என்பதே தேவனுடைய அழைப்பை நாம் நிறைவேற்றுகிறோமா இல்லையா என்பதைத் தீர்மானிக்கும். சிலர் நிறைய காரியங்களை விட்டுவிட்டார்கள், ஆனால் அவர்களால் விட முடியாத சில சிறிய விஷயங்கள் தங்கள் வாழ்க்கையில் தேவனுடைய அழைப்பின் முழுமைக்குள் நுழைவதிலிருந்து அவர்களைத் தடுக்கின்றன. மற்ற எல்லா விஷயங்களையும் விட்டுவிட செலுத்தும் விலைக்கிரயத்தைவிட அந்த சில குறிப்பிட்ட விஷயங்களை விட்டுவிட செலுத்த வேண்டிய விலைக்கிரயம் மிக அதிகம். ஆனால் அதைத்தான் கர்த்தர் கேட்கிறார்! செலுத்த முடியாத அளவுக்கு விலைக்கிரயம் அதிகமானதாகக் காணப்படுகிறதா? நம் வாழ்வில் பிதாவின் அங்கீகாரத்தைப் பெற்றிருப்பதால் கிடைக்கும் பலன் மிக அதிகம் என்பதை நினைவில்கொள்ளுங்கள்! உங்கள் வாழ்க்கையில் தேவனுடைய அழைப்பை நிறைவேற்ற நீங்கள் விலைக்கிரயம் செலுத்துவீர்களா?

# 7
# பயம்—ஒரு மிகக்கொடிய எதிரி

அநேகர் பயத்தினால்—தோல்வி பயம், எதிர்கால பயம், பற்றாக்குறை பயம் மற்றும் மனுஷனைக் குறித்த பயம்—தேவனுடைய அழைப்பை சமரசம் செய்கிறார்கள். பயம் அவர்களைக் கட்டிவைத்திருப்பதால் அவர்கள் அதிலிருந்து வெளியே வந்து தேவனுடைய அழைப்பை நிலைநாட்டுவதில்லை. *“ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு நான் சென்று ஒரு திருச்சபையை நிறுவ வேண்டும் என்று தேவன் விரும்புகிறார், ஆனால் நான் தோல்வியுற்றால் என்ன செய்வது? திருச்சபை ஒருபோதும் வளரவில்லை என்றால் என்ன செய்வது?" என்று சிலர் நினைத்துக்கொண்டிருக்கலாம். தோல்வி பயம் அவர்களை முன்னோக்கி அடியெடுத்து வைக்கவிடாமல் தடுக்கிறது. கிறிஸ்துவுக்குள் நம்மை “வெற்றிசிறக்கப் பண்ணுகிறவர்”* (2 கொரிந்தியர் 2:14) தேவன் ஒருவரே என்பதை நாம் மனதில்கொள்ள வேண்டும். எனவே, நாம் தேவனைச் சார்ந்து வாழ்கிறோம். வெற்றியையும் தோல்வியையும் நாம் தேவனுடைய பார்வையில் பார்க்க வேண்டும். வெற்றி என்பது தேவனுடைய சித்தத்தைச் செய்வதும், அவர் நமக்குக் கட்டளையிட்டதை நிறைவேற்றுவதும் ஆகும். அது எண்ணிக்கையிலோ, சாதனைகளிலோ, அல்லது புகழிலோ இல்லை.

சிலர் எதிர்காலத்தைப் பற்றிய பயத்தால் கட்டப்பட்டுள்ளனர். “நான் என்ன செய்ய வேண்டும் என்று தேவன் விரும்புகிறாரோ அதை நான் இப்போது செய்தால், அதன் பிறகு என்ன நடக்கும்?” என்று அவர்கள் நினைக்கிறார்கள். அவர்களால் எதிர்காலத்தைப் பார்க்க முடியாததால் அவர்கள் பயப்படுகிறார்கள். தேவன் நமக்கு எல்லாவற்றையும் ஒரே நேரத்தில் காண்பிப்பதில்லை. அவர் நம்மைப் படிப்படியாக வழிநடத்துகிறார். தேவன் ஆதியிலிருந்தே அதன் முடிவை அறிவார். அடுத்து என்ன நடக்கும் என்பது அவருக்குத் தெரியும். நாம் செய்ய வேண்டியது என்னவென்றால், அவரை நம்புவதும், தற்போதைய வாழ்க்கைப் பருவத்தில் நாம் என்ன செய்ய வேண்டும் என்று தேவன் விரும்புகிறாறோ

அதைச் செய்வதும் ஆகும். நாம் திட்டமிட வேண்டும் என்பது முக்கியம்தான், ஆனால் தேவனுக்குக் கீழ்ப்படிவது என்பது மிகவும் முக்கியமாகும். சில நேரங்களில், கர்த்தருடைய வார்த்தையும் அவருடைய வழிநடத்துதல்களும் நாம் சிந்தித்த ஒரு திட்டத்திற்கு ஏற்ப பொருந்தி வருவதில்லை. ஆனாலும் நாம் அப்போதும் கூட கீழ்ப்படிய வேண்டும்!

சிலர் பற்றாக்குறை எனும் பயத்தால் கட்டுண்டு கிடக்கிறார்கள். சிலர், தேவன் எதைச் செய்யச் சொல்லி அவர்களை அழைக்கிறாரோ அதைச் செய்தால் அன்றாடத் தேவைகள் சந்திக்கப்படாது என்று பயப்படுகிறார்கள். *“தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள்”* (மாற்கு 11:22) என்று இயேசு சொன்னார். சகல தேவைகளையும் சந்திப்பதாக தேவன் வாக்குப்பண்ணியிருக்கிறார். அவருடைய வார்த்தையின் மீதான விசுவாசம் உங்கள் இருதயத்திலிருந்து உங்கள் பயத்தை நீக்கிப்போடுவதாக!

இன்னும் சிலர் மனுஷனைக் குறித்த பயத்தால் கட்டுண்டுள்ளனர். அவர்கள் மற்றவர்களால் பயமுறுத்தப்படுகிறார்கள்—அவர்களைத் துன்புறுத்தக்கூடிய ஜனங்களாலும், சில சமயங்களில் மற்ற ஊழியர்கள் நிமித்தமாகவும் பயப்படுகின்றனர். *"மனுஷனுக்குப் பயப்படும் பயம் கண்ணியை வருவிக்கும்: கர்த்தரை நம்புகிறவனோ உயர்ந்த அடைக்கலத்திலே வைக்கப்படுவான்"* (நீதிமொழிகள் 29:25) என்று வேதம் கூறுகிறது. தேவனை விசுவாசிப்பதன் மூலமாக, உங்களைப் பிடித்து வைத்திருக்கிற பயத்திலிருந்து நீங்கள் வெளியே வரலாம். யோசுவா தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டபோது கர்த்தர் சொன்னதை நினைவுகூருங்கள். *“நான் உனக்குக் கட்டளையிடவில்லையா? பலங்கொண்டு திடமனதாயிரு. திகையாதே, கலங்காதே, நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றார்”* (யோசுவா 1:9). கர்த்தருக்குள் தைரியமாக இருங்கள். தேவன் மீதான உங்கள் விசுவாசம் அவருடைய அழைப்புக்குக் கீழ்படியத்தக்கதாக உங்களை விடுவிக்கட்டும்!!

# 8
# தீர்மானம் உங்களுடையது

நம் இருதயங்களில் கர்த்தரைத் தேடுவதற்கான நோக்கத்தைக் கொண்டிருக்கவும், அவ்வாறு அவரைத் தேடவும் முடியும் என்பதே தேவனுடனான நம் வாழ்வில் உள்ள அற்புதமான விஷயங்களில் ஒன்றாகும். நாம் மனந்திரும்பி மாற்றத்தை அடையலாம். நாம் தேவனுடன் இணைந்து செல்லலாம். நாம் பரலோகத்திற்குச் செல்வோம் என்றாலும் கூட, நித்தியத்திற்குள் நம்முடன் எடுத்துச் செல்லும்படியான எந்த பலனும் நம்மிடம் இருக்காது. உண்மையில், நாம் அவ்வாறு கண்டிப்பாகச் செய்ய வேண்டும். இருந்தபோதிலும், நாம் தவறான தேர்வுகள் செய்து, சமரசம் செய்துவிட்டபின்பு, பிரச்சனையில் சிக்கிக்கொண்டாலும் கூட, கர்த்தர் நம்மை அதிலிருந்து வெளியே கொண்டுவர வல்லவராய் இருக்கிறார். *"பயங்கரமான குழியிலும் உளையான சேற்றிலுமிருந்து என்னைத் தூக்கியெடுத்து, என் கால்களைக் கன்மலையின்மேல் நிறுத்தி, என் அடிகளை உறுதிப்படுத்தி"* (சங்கீதம் 40:2) என்று சங்கீதக்காரன் கூறியிருக்கிறான். நம் வாழ்க்கையை உண்மையாக ஆராய்ந்து, தேவையான மாற்றங்களைச் செய்வதற்கு தேவனுடைய பலத்தைப் பெறுவதுதான் நாம் செய்ய வேண்டிய முக்கியமான விஷயமாகும்.

உங்கள் அழைப்பை நீங்கள் சமரசம் செய்தவர்களாய் இருக்கிறீர்களா? உங்கள் முழு இருதயத்தோடும் தேவனுடைய அழைப்பைப் பின்தொடர்கிறீர்களா? உங்கள் வாழ்க்கையில் தேவனுடைய அழைப்போடு உங்களை முழுமையாக இணைத்துக்கொள்ள இன்று நீங்கள் என்னென்ன மாற்றங்களைச் செய்ய வேண்டியுள்ளது?

நமக்கு ஒரு வாய்ப்பு உண்டு. நாம் ஜீவ பாதையில் நடந்தாலும், இரட்சிக்கப்பட்டிருந்தாலும் கூட, முழு இருதயத்தோடும் தேவனுடைய அழைப்பைப் பின்தொடராதவர்களாய் போய்விட வாய்ப்பு உண்டு. நாம் பரலோகத்திற்குச் செல்வோம் என்றாலும் கூட, நித்தியத்திற்குள் நம்முடன் எடுத்துச் செல்லும்படியான பலனும் நம்மிடம் இருக்காது. மறுபுறம்,

“பெரிய" காரியங்களைச் செய்ய அழைக்கப்பட்டிருந்தாலும் சரி அல்லது "சிறிய" காரியங்களைச் செய்ய அழைக்கப்பட்டிருந்தாலும் சரி, தேவனுடைய அழைப்பை நிறைவேற்றுவதைத் தடுக்கக்கூடிய சவால்களை நீ எதிர்கொள்வாய்.

ஒருவேளை நீ திசை திருப்பப்பட்டிருக்கலாம், தேவனுடைய ராஜ்யத்தைப் பின்தொடர்வதற்குப் பதிலாக, வெற்றி, ஐசுவரியம் அல்லது தனிப்பட்ட லட்சியங்களைப் பின்தொடர்வதற்காக இப்போது உன் பலத்தை செலவிட்டுக் கொண்டிருக்கலாம் உனக்கு வெளிப்படுத்தப்பட்ட கர்த்தருடைய வார்த்தை, பரிசுத்த ஆவியானவர் உனக்குக் கொடுத்த சொப்பனங்கள் மற்றும் தரிசனங்கள் ஆகியவை ஒரு மூலையில் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கலாம்.

உன்னைத் தட்டி எழுப்பி, மீண்டும் நிலைநிறுத்துவதும், நீ சிக்கிக் கொள்ளக்கூடிய சில கண்ணிகளைக் குறித்து உன்னை எச்சரிப்பதுமே இந்தப் புத்தகத்தின் நோக்கமாகும். நல்ல போராட்டத்தை போராடி உனக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கிற ஓட்டத்தை ஓடி முடி.

**All Peoples Church & World Outreach,**
# 319, 2nd Floor, 7th Main, HRBR Layout,
2nd Block, Kalyan Nagar, Bangalore 560 043
Karnataka, INDIA

Phone: +91-80-25452617
Email: contact@apcwo.org
Website: apcwo.org